பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**09 12 2025** **TUESDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான விவாதம் தற்போது மக்களவையில் நடைபெற்று வருகிறது.

**2)** வனவிலங்குகள் மற்றும் வெள்ளப்பெருக்கால் ஏற்படும் பயிர் சேதத்திற்கும் பயிர் காப்பீட்டுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

**3)** நீலகிரியில் நடைபெறும் நாடாளுமன்ற விளையாட்டுத் திருவிழாவில் பங்கேற்றுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**4)** தமிழகத்தில் மருத்துவப் பணியிடங்களுக்கான கலந்தாய்வு வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்படுவதாக மாநில அரசு கூறியுள்ளது.

**5)** இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதலாவது ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான விவாதம் தற்போது மக்களவையில் நடைபெற்று வருகிறது.

இதனை தொடங்கிவைத்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு மணீஷ் திவாரி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து தேர்தல் ஆணையத்திடமிருந்து எழுத்துப்பூர்வமான விளக்கத்தை பெற்று அவையில் தாக்கல் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நாட்டின் பல மாநிலங்களில் நடைபெற்றுவரும் இப்பணிகளை சட்டரீதியாக நியாயப்படுத்த முடியாது என்று அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை நடத்துவதற்கு அரசியல் சாசனத்தில் இடமில்லை என்றும் அவர் கூறினார்.

யாருக்கு வாக்களித்தோம் என்பதை அறிந்துகொள்ளும் இயந்திரத்தில் பதிவான வாக்குகள் முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும் திரு மணீஷ் திவாரி, வலியுறுத்தினார்.

மக்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில் எதிர்க்கட்சியினர் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்து தவறான

தகவல்களை பரப்பி வருவதாக பிஜேபியின் திரு சஞ்சய் ஜெய்ஷ்வால் குற்றம் சாட்டினார்.

பீகாரில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து, சட்டப்பேரவைத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் சந்தித்த பெரிய தோல்வியை மறைப்பதற்காகவே இதுபோன்ற குற்றச்சாட்டுகளை கூறி வருவதாக அவர் தெரிவித்தார்.

சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு அகிலேஷ் யாதவ், தேர்தல் ஆணையம் நடுநிலையுடன் இருந்தால்தான் சீர்திருத்தங்கள் சரியாக அமையும் என்று கூறினார்.

மீண்டும் வாக்குச்சீட்டு முறைக்கு மாறுவதுதான் சரியானது என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

வனவிலங்குகள் மற்றும் வெள்ளப்பெருக்கால் ஏற்படும் பயிர் சேத்திற்கும் பயிர் காப்பீடு திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், நாட்டில் இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி 357 மில்லியன் டன்னாக இருக்கும் என்றார்.

இது கடந்த ஆண்டைவிட 7 புள்ளி ஆறு ஐந்து சதவீதம் அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகளின் கடின உழைப்பு மற்றும் அரசின் கொள்கைகள் இதனை சாத்தியமாக்கி இருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த 2014-15ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10 ஆண்டு காலத்தில் உணவு தானிய உற்பத்தி 42 சதவீதம் அதிகரித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்குத் தேவையான உதவிகளை மத்திய அரசு வழங்கி வருவதாகவும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறினார்.

<<<<<>>>>>

திருப்பதி - சாய் நகர் ஷீரடி புதிய எக்ஸ்பிரஸ் ரயிலை, ரயில்வே இணையமைச்சர் திரு சோமண்ணா இன்று புதுதில்லியில் காணொலி வாயிலாக தொடங்கிவைத்தார்.

திருப்பதி ரயில் நிலையத்தில் ஆந்திரப்பிரதேச சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு B C ஜனார்தன் ரெட்டி கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா, மகாராஷ்ட்ராவில் உள்ள யாத்ரிகர்களுக்கு இந்த ரயில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறினார்.

இரண்டு ஆன்மிக தலங்களை இணைக்கும் வகையில் இந்த ரயில் இயக்கப்படுவதாகவும் திரு **B C** ஜனார்தன் ரெட்டி தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ், இதுவரை **99** புள்ளி ஒன்பது ஐந்து சதவீத கணக்கீட்டுப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்படி, **6** கோடியே, **40** லட்சத்து **84** ஆயிரத்து **624** கணக்கீட்டுப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில், **99** புள்ளி ஐந்து ஐந்து சதவீத படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, நீலகிரி மாவட்டத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டமன்ற தொகுதியில பணியாற்றிவரும் வாக்குச்சாவடி நிலை அலுவலர் தங்கள் பகுதியில் இப்பணிகள் சரியான முறையில் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

(***Sound Byte — BLO (Menaka) 53 Sec.)***

<<<<<>>>>>

நீலகிரியில் நடைபெறும் நாடாளுமன்ற தொகுதி விளையாட்டுத் திருவிழாவில் பங்கேற்றுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் வழிகாட்டுதலின்படி, நாடு முழுவதிலும் உள்ள நாடாளுமன்ற தொகுதிகளில் இப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் நடைபெறும் இப்போட்டியில் கபடி, கால்பந்து, சிலம்பம், யோகா, இறகுபந்து போன்ற போட்டிகள் நடைபெறுவதையும் டாக்டர் எல். முருகன் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் மருத்துவப் பணிகளுக்கான நியமனங்கள் பணியிட மாறுதல்கள் கலந்தாய்வு மூலம் வெளிப்படைத் தன்மையுடன்

மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று **405** பகுதி சுகாதார செவிலியர்கள் மற்றும் **117** வட்டார சுகாதார பணியாளர்களுக்கான பதவி உயர்வு ஆணைகளை அவர் வழங்கினார்.

புதிய பணியிடங்களுக்கான நியமன ஆணைகள் கலந்தாய்வு மூலம் மேற்கொள்ளும் நடைமுறை மாநில அரசால் தொடங்கப்பட்டு, சீரிய முறையில் நடைபெற்று வருவதாகவும் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருப்பதாக மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசுத்துறைகளின் சேவைகள் மற்றும் திட்டங்களின் பலன் மக்களின் வீடுகளுக்கே சென்று வழக்கப்படுவதாக கூறினார்.

ராசிபுரம் அரசு மருத்துவமனை, மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், ராசிபுரத்தில் மினி டைடல் பூங்கா அமைக்கும் பணிகள் தொடங்கியிருப்பதாகவும் திரு மதிவேந்தன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

திண்டுக்கல் மாவட்டம் குதிரையாறு அணையிலிருந்து நாளை முதல் 120 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்மூலம், திண்டுக்கல் மாவட்டம் பாப்பம்பட்டி, சங்கராமநல்லூர், ஆண்டிப்பட்டி ஆகிய கிராமங்களை சேர்ந்த ஆயிரத்து தொள்ளாயிரத்து 81 ஏக்கர் நிலங்களும், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 882 ஏக்கர் நிலங்களும் பாசனவசதி பெறும்.

இதனிடையே, தென்காசி மாவட்டம் கடனா நீர்த்தேக்கத்திலிருந்து நாளை முதல் 112 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன்மூலம், தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களை சேர்ந்த 9 ஆயிரத்து தொள்ளாயிரத்து 23 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருநெல்வேலியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பொருநை அருங்காட்சியகம் உள்ளிட்ட கட்டுமானப் பணிகளை அமைச்சர்கள் திரு கே என் நேரு, திரு தங்கம் தென்னரசு ஆகியோர் இன்று ஆய்வு செய்தனர்.

----------------

காஞ்சிபுரம் மாவட்டம் சிங்காடிவாக்கம், மானாம்பதி, ஊத்துக்காடு, காட்ராம்பாக்கம், வளையகரணை ஆகிய கிராமங்களில் பொது விநியோகத்திட்ட குறைதீர் முகாம் வரும் 13-ஆம் தேதி நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

---------------

தேனி மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் மாவட்ட அளவிலான கல்விக்கடன் முகாம் வடபுதுப்பட்டியில் உள்ள தனியார் தொழில்நுட்ப கல்லூரியில் நாளை நடைபெறவுள்ளது.

-------------------

தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

----------------

சென்னையில் புனரமைக்கப்பட்டு வரும் விக்டோரியா பொது அரங்கத்தை மேயர் திருமதி பிரியா இன்று ஆய்வு செய்தார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதலாவது ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி, கட்டாக்கில் இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

-----------

ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Sanskar Saraswat, Lokesh Kalagotla** ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்

கட்டாக்கில் இன்று தொடங்கிய இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் **Sanskar Saraswat 21-13, 21-23, 21-9** என்ற செட் கணக்கில், **Himanish Das** -ஐ வென்றார்.

மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் **Lokesh Kalagotla 21-17, 21-14** என்ற செட் கணக்கில் **Shantanu Sharma**-வை வென்றார்.

**<<<<<END>>>>>**